பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

14 12 2025 SUNDAY 6 45 AM

வணக்கம் - மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- ரயில் முன்பதிவு இணையதளத்தில் போலி கணக்குகள் வெகுவாக குறைந்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.
- பால் உற்பத்தி மற்றும் கால்நடை வளர்ப்பு போன்றவை விவசாயிகளின் வருவாயை அதிகரிக்க உதவிடும் என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.
- சுகாதார நடவடிக்கைகள் காரணமாக, தொற்றா நோய்களின் மூலம் ஏற்படும் இறப்பு விகிதம் கணிசமான அளவில் குறைந்துள்ளது என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் மேம்பாட்டிற்கான திட்டங்களை திமுக அரசு முறையாக செயல்படுத்தவில்லை என்று அஇஅதிமுக குற்றம் சாட்டியுள்ளது.
- உலக கோப்பை ஸ்குவாஷ் போட்டியில், இந்தியா இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளது.

>>>>>><<<<<<

வந்தேபாரத் ரயில்களில் உள்ளூர் உணவு வகைகளை பயணிகளுக்கு வழங்குவது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருவதாக ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய அவர், இத்தகைய நடவடிக்கை ரயில் பயணிகளுக்கு கலாச்சாரம் மற்றும் பாரம்பரிய உணவுகளின் மூலம் சிறந்த பயண அனுபவத்தை வழங்க முடியும் என்றும் கூறினார்.

ரயில் முன்பதிவில் மேற்கொள்ளப்பட்டுள்ள சீர்திருத்த நடவடிக்கைகள் காரணமாக, போலியான கணக்குகள் தொடங்கப்படுவது வெகுவாக குறைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ரயில் பயணிகளுக்கு எளிதாகவும், தடையற்ற வகையிலும் பயணச் சீட்டு முன்பதிவு முறையை வழங்குவதற்கான நடவடிக்கைகளை உறுதி செய்யுமாறு அதிகாரிகளுக்கு அமைச்சர் அறிவுறுத்தினார்.

சீர்திருத்த நடவடிக்கைகள் காரணமாக, 3 கோடிக்கும் அதிகமான போலி கணக்குகள் செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளதாகவும் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

விவசாயிகள் வேளாண் சார்ந்த நடவடிக்கைகளுடன், பால் உற்பத்தி மற்றும் கால்நடை வளர்ப்பு போன்ற நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவதன் மூலம் வருவாயை அதிகரித்துக் கொள்ள முடியும் என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் வலியுறுத்தியுள்ளார்.

மத்தியப்பிரதேச மாநிலம், போபாலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய அவர், நீடித்த வருவாயை உறுதி செய்ய இது உதவிடும் என்று கூறினார்.

கிராமப்புறங்களில் உள்ள சிறு விவசாயிகளுக்கு கால்நடை வளர்ப்பு முக்கிய ஆதாரமாக உள்ளது என்று அவர் தெரிவித்தார்.

வேளாண் சார்ந்த இதர துறைகளில் விவசாயிகளுக்கு தேசிய பால்வள ஆராய்ச்சி நிறுவனம் பயிற்சி அளித்து வருவதாக திரு. சிவராஜ் சிங் சௌஹான் குறிப்பிட்டார்.

>>>>>><<<<<<

கைவினைப் பொருட்களின் ஏற்றுமதி 50 ஆயிரம் கோடி ரூபாயை எட்டியுள்ளதாக மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், இன்றைய இளம் தலைமுறையினர் பாரம்பரிய கைவினைக் கலைகள் குறித்து அறிந்து கொள்ள முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

கைவினைப் பொருட்களின் ஏற்றுமதியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

இதற்கென 100 கைவினைக் கலைஞர்களைக் கொண்ட கூட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

புதுதில்லியில் நடைபெற்று வரும் தேசிய கைவினைப் பொருட்கள் கண்காட்சி, இத்துறை சார்ந்த கலைஞர்களுக்கு பெரிதும் உதவிடும் என்றும் திரு. கிரிராஜ் சிங் கூறினார்.

>>>>>><<<<<<

சுகாதாரத் துறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு நடவடிக்கைகள் காரணமாக, தொற்றா நோய்களின் மூலம் ஏற்படும் இறப்பு விகிதம் வெகுவாக குறைந்துள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

சேலத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்தில் நடத்தப்பட்டு வரும் மருத்துவ முகாம்கள் மக்களிடையே வரவேற்பை பெற்றுள்ளதாக தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - மா. சு 40 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

மகளிர் உரிமைத்தொகை திட்டம், பெண்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு உறுதுணையாக உள்ளதாக மாநில அமைச்சர் திரு. மதிவேந்தன் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டம், ராசிபுரத்தில் பல்வேறு நலத் திட்டங்களை தொடங்கி வைத்து பேசிய அவர், மகளிர் உரிமைத் தொகையை பெறாதவர்களுக்கு மேல்முறையீடு செய்வதற்கான கால அவகாசம் வழங்கப்படும் என்றும் கூறினார்.

நாமக்கல் மாவட்டத்தில் முதற்கட்டமாக இரண்டரை லட்சம் பேர் மகளிர் உரிமைத்தொகையை பெற்று வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

தமிழகத்தை குடிசைகள் இல்லாத மாநிலமாக உருவாக்கும் நோக்கில், வீட்டு வசதி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாக மாநில அமைச்சர் திரு. சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், இத்திட்டத்தின் கீழ், 8 லட்சம் வீடுகள் கட்டுவதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இதில் தற்போது ஒரு லட்சம் வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும், தமிழகத்தில் நடத்தப்பட்டு வரும் தனியார் வேலைவாய்ப்பு முகாம்கள் மூலம், 2 லட்சத்து 84 ஆயிரம் பேர் வேலைவாய்ப்பை பெற்றுள்ளதாக திரு. சக்கரபாணி கூறினார்.

>>>>>><<<<<<

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் மேம்பாட்டிற்கான எந்த திட்டத்தையும் திமுக அரசு செயல்படுத்தவில்லை என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஆதிதிராவிடர் மாணவர் விடுதிகளுக்கு உரிய காலத்தில் நிதியை விடுவிக்குமாறு மாநில அரசை வலியுறுத்தியுள்ளார்.

>>>>>><<<<<<

போதைப்பொருள் இல்லாத இந்தியாவை உருவாக்கும் நோக்கில், சென்னையில் இன்று அரை மாரத்தான் ஓட்டம் நடைபெற்றது.

இந்திய கடற்படை, முதல்முறையாக ஏற்பாடு செய்திருந்த இந்த மாராத்தான் ஓட்டம், 3 பிரிவுகளாக நடைபெற்றது.

இதில் 7 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

நீதிமன்றங்களில் நீண்ட காலமாக நிலுவையில் உள்ள வழக்குகளுக்கு தீர்வு காணும் வகையில், மக்கள் நீதிமன்றங்கள் நடத்தப்பட்டு வருகிறது.

தருமபுரியில் நடைபெற்ற மக்கள் நீதிமன்றத்தில் ஆயிரத்து 582 வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் – தருமபுரி 40 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

இருவரிச் செய்திகள்

தாய்லாந்து - கம்போடியா நாடுகள் போர் நிறுத்தத்தை உடனடியாக அமல்படுத்த வேண்டும் என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் வலியுறுத்தியுள்ளார்.

>>>>>><<<<<<

ரஷ்யாவில் உள்ள Sarotov நகரம் மீது யுக்ரைன் நடத்திய ட்ரோன் தாக்குதலில் 2 பேர் உயிரிழந்துள்ளனர்.

>>>>>><<<<<<

பெலாரஸில் உற்பத்தி செய்யப்படும் பொட்டாஷ் உரங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை அமெரிக்கா நீக்கியுள்ளது.

>>>>>><<<<<<

மூளை செயலிழப்பிற்கு சிகிச்சை அளிக்கும் நவீன Supernova Stent உபகரணத்தை எயிம்ஸ் மருத்துவமனை பரிசோதனை செய்துள்ளது.

>>>>>><<<<<<

பல்வேறு வகையான எஃகு பொருட்களின் விற்பனையில் சாதனை படைக்கப்பட்டுள்ளதாக இந்திய எஃகு உற்பத்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

பஞ்சாப் மாநிலத்தில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான வாக்குப்பதிவு இன்று காலை 8 மணிக்கு தொடங்குகிறது.

>>>>>><<<<<<

Saquib Nachan வழக்கு தொடர்பாக 40-க்கும் மேற்பட்ட இடங்களில் அமலாக்க இயக்குநரகம் சோதனை நடத்தியது.

>>>>>><<<<<<

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அருகே நேரிட்ட சாலை விபத்தில் 2 பேர் உயிரிழந்தனர்.

>>>>>><<<<<<

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி ஐயப்பன் கோவிலில் கார்த்திகை மாதத்தை ஒட்டி, பழங்கள், காய்கறிகள் மற்றும் ரூபாய் நோட்டுக்களால் அலங்காரம் செய்யப்பட்டிருந்த ஐயப்பனை ஏராளமான பக்தர்கள் தரிசனம் செய்தனர்.

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

உலக கோப்பை ஸ்குவாஷ் போட்டியில், இந்தியா இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளது.

சென்னையில் நடைபெற்று வரும் இப்போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா 3-0 என்ற போட்டி கணக்கில் எகிப்தை வென்றது.

இன்று நடைபெறவுள்ள இறுதிப்போட்டியில், இந்தியா – ஹாங்காங்கை எதிர்கொள்கிறது.

>>>>>><<<<<<

இந்தியா - தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையேயான மூன்றாவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

தரம்சாலாவில் நடைபெறும் இப்போட்டி இன்றிரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

ஐந்து போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் இரு அணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றிபெற்று சமநிலையில் உள்ளன.

>>>>>>END<<<<<<